Registered as a NewsPaper

பக்கங்கள் - iv

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

கிளிநொச்சியில்
கணினி மையம்
TCC
கணினி விற்பனையாளரும் திருத்த சேவையாளரும்
சி-8629 யாழ். சாலை, கிளிநொச்சி.

நாதம் 14 திருவள்ளுவர் ஆண்டு 2033 புரட்டாதி -30 17-10-2003 வெள்ளிக்கிழமை ஓசை 24

# நோர்வேவெளியுறவு அமைச்சர் ஜான் பீற்றர்சன் விடுதலைப் புலிகள் நேற்று ஒஸ்லோவில் சந்திப்பு!

## இ.நி.வரைவு சமர்ப்பிக்கப்படவுள்ள பின்னணியில் அரசியல் சூழ்நிலை பற்றிக் கலந்துரையாடினர்





(ஒஸ்லோ)

**நோர்வே சென்றுள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், மட்டு-அம்பாறை சிறப்புத் தளபதி கேணல் கருணா தலைமையிலான குழுவினர் நேற்று மாலை நோர்வே வெளிவிவகார அமைச்சரின் அழைப்பின் பேரில் வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் அவர்களை அமைச்சகத்தில் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினர். இதில் இடைக்கால நிர்வாக வரைவு சமர்ப்பிக்கப்பட இருக்கும் பின்னணியில் இன்றைய அரசியல் சூழ்நிலை பற்றி விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.**

இச் சந்திப்பிற்குச் சென்ற விடுதலைப்புலிகள் குழுவினரை அமைச்சர் ஜான் பீற்றர்சன் சிறப்புத்தூதுவர் எரிக்சூல்கெய்ம் செல்வி லிசா கோல்டன் ஆகியோர் அமைச்சக வாயிலில் நின்று வரவேற்றனர். மிகவும் சுமுகமான சூழலில் விடுதலைப் புலிகள் அணியினரை வரவேற்பது குறித்து தாம் அகமகிழ்வு கொள்வதாக அமைச்சர் தெரிவித்தார்.

(IV ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்கால நிர்வாக இறுதித்திட்ட வரைவு இம்மாத இறுதிக்குள் சமர்ப்பிக்கப்படும்

### கெல்வேஹசனிடம் தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

இடைக்கால நிர்வாக திட்ட வரைவுகள் இவ்வார இறுதியில் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டு பின்னர் இறுதி வரைவு இம்மாத இறுதிக்குள் நோர்வேயிடம் சமர்ப்பிக்கப்படுமென அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சருடனான சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஒஸ்லோவிலுள்ள வெளிநாட்டமைச்சு அலுவலகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் இடைக்கால நிர்வாகம் சம்பந்தமான

(IV ஆம் பக்கம் பார்க்க)

## க.கா.கு. அரசியல் ஆலோசகர் கடற்புலிகளுடன் சந்திப்பு

இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அரசியல் ஆலோசகர் தலைமையிலான குழுவினருக்கும் கடற்புலிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று முல்லைத்தீவில் நடைபெற்றுள்ளது. இதில் கடற்புலிகள் சார்பில் கடற்புலிகளின் துணைத்தளபதி செழியன் கலந்து கொண்டார். இச் சந்திப்பின் போது அண்மையில் திருகோணமலை கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்ட இரண்டு போராளிகளை விடுதலை செய்வது தொடர்பாகவும் கடற்புலிகள் கடலில் தமது பயிற்சிகளை மேற்கொள்வதற்கான எல்லைகள் தொடர்பாகவும் கடற் போக்குவரத்துக்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டதுடன் மீனவர்கள் கடலில் அச்சுறுத்தல்கள் எதுவுமின்றி மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாகவும் ஆழ் கடல் பரப்பில் சென்று மீனவர்கள் தொழில் புரிவதற்கான ஒழுங்குகளை ஏற்படுத்துவது தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

அத்துடன் கடற்புலிகளுக்கும் கடற்படையினருக்கும் இடையில் நல்லுறவைப் பேணும் வகையில் சந்திப்புக்கள் ஏற்படுத்துவது தொடர்பாகவும் ஆராயப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.




மன்னாரில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வில்...... (மேலும் படங்கள். III ஆம் பக்கத்தில்)

## புலிகளின் அரசியல் செயற்பாட்டிற்கான தடைக்கு கண்காணிப்புக்குழுவும் துணைபோகிறது!

### புலிகளின் வவு.மாவட்ட அரசியல்துறை விசனம்

கடந்த 12-10-2003 அன்று விபத்தின் காரணமாக சாவினைத் தழுவிக்கொண்ட ஆழிவேந்தன் எனும் மாவீரனின் வித்துடலை வவுனியாவில் தரணிக்குளம் எனும் முகவரியில் உள்ள அவரது பெற்றோரிடம் ஒப்படைக்க எடுத்துவரப்பட்ட போது ஓமந்தை இராணுவச் சோதனைச் சாவடியில் தடுத்து நிறுத்தப்பட்டதைக் கண்டித்து வவு.மா.வட்ட அரசியல்துறை அறிக்கை விடுத்துள்ளது. அதில் கண்காணிப்புக்குழுவிற்கு எழுதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இதற்கு அவர்கள் சொன்ன காரணம் புலிக்கொடி போர்த்தப்பட்டுள்ளது என்பது. இதனைத் தொடர்ந்து புலிக்கொடி எடுக்கப்பட்டதன் பின் தங்களூடாக இவ் விடயத்தை இராணுவத்தினருக்குத் தெரியப்படுத்தப்பட்ட போது தங்களால் எமக்கு ஒரு பட்டியல் இடப்பட்ட விபரம் தரப்பட்டது. அதில், சீருடை தவிர்த்தல், புலிக்கொடி தவிர்த்தல், ஒலிபெருக்கி அறிவித்தல் செய்யக்கூடாது, அஞ்சலிக் கூட்டம் நடாத்தக்கூடாது, வித்துடலை எடுத்துக்கொண்டு ஊர்வலமாகச் செல்ல முடியாது, இச்சம்பவம் நிறைவுபெறும் வரை கண்காணிப்புக்குழு கண்காணிப்பில் ஈடுபட வேண்டும். எனும் பட்டியல் வாசித்துக்காட்டப்பட்டது.

இதில் இறந்துபோன ஒருவரது மரணச் சடங்கினைச் செய்வதற்குப் படையினர் எந்த அளவு கெடுபிடிகளை விதிக்கின்றார்கள் என்பதைப் புரிந்துகொள்ளக் கூடியதாக உள்ளது. இது ஒரு போர்நிறுத்த மீறலாகும். ஏனெனில்

(IV ஆம் பக்கம் பார்க்க)

## போலியோ சொட்டு மருந்து

தணுக்காய் பிரதேசத்தில் மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட 37 பிரதேசங்களில் நாளை சனிக்கிழமை ஒன்று முதல் 10 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்குப் போலியோ சொட்டு மருந்து வழங்கப்படவுள்ளது. இதில் 10 வயதுக்கு உட்பட்ட

(IV ஆம் பக்கம் பார்க்க)

## சர்ச்சைக்குரிய விடயங்கள் சனாதிபதி - பிரதமர் பேச்சு!

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் நேற்று சந்திப்பொன்றை நடாத்தியுள்ளனர். நேற்று சனாதிபதி மாளிகையில் நடைபெற்ற இச்சந்திப்பின் போது இனப்பிரச்சினையின் தீர்வு விடயம், இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவுக்கு மேலதிக உறுப்பினர்கள் நியமித்தல், பொலிஸ்மா அதிபர் நியமனம், அபிவிருத்தி லொத்தர்

(IV ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ்மா அதிபர் நியமனம் சனாதிபதி–பிரதமர் முரண்பாடு!

சிறிலங்காப் பொலிஸ்மா அதிபரை நியமிக்கும் விவகாரத்தில் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையே தோன்றியுள்ள முரண்பாடு காரணமாக பொலிஸ்மா அதிபர் நியமனம் இழுபறிநிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் பதில் பொலிஸ்மா அதிபராக சனாதிபதி ஒருவரையும் பொலிஸ்மா அதிபரின் கடமைகளை நடைமுறைப்படுத்த ரணில் நால்வரையும் நியமித்துள்ளனர்.

சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில்வாவை பதில் பொலிஸ்மா அதிபராக சிறிலங்கா சனாதிபதி நியமித்துள்ளார்.

(IV ஆம் பக்கம் பார்க்க)

# வீதி ஒழுங்கு பற்றி காவல்துறை கருத்தரங்கு

(பளை)

பளைப் பிரதேசத்தில் உள்ள மோட்டார் சைக்கிள் பாவனையாளர்களுக்கான வீதி ஒழுங்குக் கருத்தரங்கு நேற்று முன்தினம் பளைக் காவல் பணிமனையில் நடைபெற்றது.

பணிமனைப் பொறுப்பாளர் மகேந்திரகுமார் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் காவல்துறை கிளிநொச்சி மாவட்ட மேற்பார்வையாளர் க. கண்ணாளன், காவல்துறை வாகனப் போக்குவரத்துப் பிரிவு மேற்பார்வையாளர் கு.கனகலிங்கம் (பிரதம பரிசோதகர்) ஆகியோர் கலந்து கொண்டு வீதி ஒழுங்கு நடைமுறை தொடர்பாகவும், வீதி விபத்துக்கள் ஏற்படாது தடுப்பது சம்பந்தமாகவும் கருத்துரைகள் வழங்கினர்.

இதில் வாகனங்களைச் செலுத்தும்பொழுது வீதி ஒழுங்குமுறைகளைக் கடைப்பிடித்து வீதி விபத்துக்களைத் தவிர்க்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

# செய்தியாளர் தாக்கப்பட்டதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமாம்

(யாழ்ப்பாணம்)

செய்தியாளர்கள் தாக்கப்பட்டமை தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ். மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் உறுதியளித்துள்ளார்.

கடந்த 11ஆம் திகதி அரியாலை மாம்பழம் சந்தியில் நடைபெற்ற இராணுவ வாகன மற்றும் ஓட்டோ விபத்து தொடர்பாக செய்தி சேகரிக்கச் சென்றவர்கள் தாக்கப்பட்டமை தொடர்பாக சம்பந்தப்பட்ட பத்திரிகை நிறுவனங்களின் நிர்வாகத்தினர் நேற்று முன்தினம் பொலிஸ் அத்தியட்சகரைச் சந்தித்து மேற்படி சம்பவம் தொடர்பாகக் கலந்துரையாடிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (33)

# மேஜர் ஈழப்பிரியா நினைவாக கிளி.இல் கராத்தே சுற்றுப் போட்டி

தமிழீழ விளையாட்டுத்துறையால் மேஜர் ஈழப்பிரியா நினைவாக நடாத்தப்படவிருக்கும் 2003 ஆம் ஆண்டுக்கான கராத்தே சுற்றுப் போட்டி 20,21,22 ஆகிய திகதிகளில் கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் எனத் தமிழீழ விளையாட்டுத்துறையினர் தெரிவித்துள்ளனர்.


## துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலை ஆசிரியை செல்வி.வே. இந்திராதேவி அவர்களின் தந்தையாராகிய அமரர் ஆறுமுகம் வேலாயுதம்பிள்ளை அவர்களின் மரணச்செய்தி கேட்டு நாமும் அவரது குடும்பத்தாரின் துயரில் பங்குகொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மு/சிலாவத்தை தமிழ் வித்தியாலய
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பெற்றோர்கள்.

(3714)

## வவுனியாவில்
## விமானப்பயணச் சீட்டுக்கள்

தற்பேரது கொழும்பு விலையிலேயே உலகின் எப்பாகத்திற்கும் விமானப் பயணச்சீட்டுக்கள் வவுனியாவிலேயே கிடைக்கும்.

அத்துடன்
- டிக்கட்கள் மீள் உறுதி செய்தல்
- வெளிநாட்டுப்பாசல்கள் அனுப்புதல்.
- விமான நிலையம் உட்பட இலங்கையில் எப்பாகத்திற்கும் பாதுகாப்பான வான் சேவை பாஸ் போட் விசா ஆலோசனை போன்ற சேவைகளுக்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

இன்ரநெற் ரவல் ஏஜன்ட்ஸ்
இல 37, 1ஆம் குறுக்குத் தெரு,
வவுனியா.
T.P. 024 2220619

(3108)

## தமிழீழ வைப்பகம்
## உந்தூர்தி ஏல விற்பனை
## 22-10-2003

தமிழீழ வைப்பகத்தின் பாவனையிலிருந்த ஐந்து (05) HONDA MD-90 இன உந்தூர்திகள் ஏல விற்பனை செய்யப்படவுள்ளன. உந்தூர்திகளைப் பார்வையிட விரும்புவோர் 2003-10-15 ஆம் நாள் தொடக்கம் 2003-10-21ஆம் நாள் வரை கிளிநொச்சி கரடிப்போக்கு இல: 63 இல் அமைந்துள்ள தமிழீழ வைப்பக நடுவப் பணியகத்தில் பணி நேரத்தில் பார்வையிடலாம்.

ஏல விற்பனை 2003-10-22ஆம் நாள் நண்பகல் 12.00 மணிக்கு தமிழீழ வைப்பக நடுவப் பணியகத்தில் நடைபெறும்.

மேலாளர்,
ஆளுகை,
நடுவப்பணியகம்,
தமிழீழ வைப்பகம்.

(சி-8655)

## தொழிற்பயிற்சி நெறி
## விண்ணப்பம் கோரல்

கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவன தலைமைத்துவப் பணிமனையும், ஆசிய ஜப்பானிய உறவுப்பால தொண்டர் நிறுவனமும் இணைந்து கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் நடாத்தவுள்ள பின்வரும் பயிற்சி நெறிகளுக்குப் பொருத்தமான இளைஞர், யுவதிகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

### பயிற்சி நெறிகள்:-

| | |
|---|---|
| ✦ மேசன் வேலைப் பயிற்சி | (3 மாத காலம்) |
| ✦ தச்சுவேலைப் பயிற்சி | (3 மாத காலம்) |
| ✦ உழவு இயந்திர திருத்தம் | (3 மாத காலம்) |

### தகைமைகள்:-

- 17 – 29 வயதுக்குட்பட்டவராக இருத்தல்.
- ஆண்டு 10 வரை கல்வி கற்றவராக இருத்தல்.

### பயிற்சியின் பலன்கள்:-

- தொழில்சார் பயிற்சிச் சான்றிதழ்.
- சுயதொழில் முயற்சிக்கான தகுதி.
- பயிற்சி நெறியினை முழுமையாக நிறைவு செய்பவர்களுக்கு திருத்த வேலைக்குரிய உபகரணத் தொகுதிகள் வழங்கல்.
- பயிற்சியின்போது உதவு தொகை வழங்கப்படும்.

### விண்ணப்ப முடிவுத் திகதி 25-10-2003

விண்ணப்பப்படிவங்கள் பெற்றுக்கொள்ளும் இடம்

இணைப்பாளர்,
கிராமிய பொருளாதார, கல்வி, ஆய்வு
அபிவிருத்தி நிறுவனதலைமைப் பணிமனை,
கனகபுரம் வீதி, கிளிநொச்சி

பயிற்சி முகாமையாளர்,
BAJ, கணேசபுரம், கிளிநொச்சி.

குறிப்பு: பயிற்சி பெற விரும்புபவர்கள், பயிற்சிக்கான விண்ணப்பங்களை சுய விபரங்களுடன் தயாரித்து தபாலிலோ அல்லது நேரிலோ மேற்படி முகவரிகளில் ஒன்றுக்கு விண்ணப்பிக்கலாம்.

(3106)

## வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவுப் பேரோளர் சங்கம்

தலைமை: திரு.இ.இளங்கோவன் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்.

காலம்:- 18.10.2003 சனிக்கிழமை மு.ப. 9.30 மணி.

இடம்:- கிளிநொச்சி இந்துக்கல்லூரி மண்டபம்.

நிகழ்வுகள்:-

- ★ பொதுச்சுடரேற்றல்
- ★ தேசியக்கொடியேற்றல்
- ★ கூட்டுறவுக் கொடியேற்றல்
- ★ அகவணக்கம்
- ★ மறைந்த கூட்டுறவாளர்களை நினைவுகூரல்
- ★ வரவேற்புரை
- ★ தலைமையுரை
- ★ கூட்டுறவாளர் உரை
- ★ பரிசளிப்பு வைபவம்
- ★ சிறப்பு விருந்தினர் உரை
- ★ போட்டியில் பரிசுபெற்றோர் உரை
- ★ சிறந்த கூட்டுறவாளர்களை கௌரவித்தல்
- ★ சங்கமம் பத்திரிகை வெளியீடு.
- ★ "ஐக்கிய கானங்கள்" ஒலிப்பேழை வெளியீடு
- ★ கலைநிகழ்வுகள்
  - ☐ நடனம்
  - ☐ நாடகம்

விழாக்குழுவினர்,
கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்.
கிளி.முல்லை மாவட்டங்கள்.

(சி-8662)

# மன்னார் பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வு




















# நாகர் கோவில் மக்களைக் குடாரப்பில் குடியமர்த்த தொண்டரமைப்புக்கள் நடவடிக்கை

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கின் நாகர் கோவில் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து பருத்தித்துறைப் பகுதியில் குடியமர்ந்துள்ள ஒரு தொகுதி குடும்பங்களை விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டின் கீழுள்ள வடமராட்சி கிழக்கின் குடாரப்புப் பகுதியில் குடியேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

1999 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதிகளில் வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளையடுத்துப் பல குடும்பங்கள் பருத்தித் துறைப் பகுதிக்கு இடம்பெயர்ந் திருந்தன. எனினும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தையடுத்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழுள்ள வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திலிருந்து இடம் பெயர்ந்த குடும்பங்களில் பெரும்பாலானவை மீளக் குடியமர்ந்துவிட்டன.

எனினும் நாகர் கோவில் பிரதேசத்தில் பாரிய படைத் தளத்தை அமைத்து நிலை கொண்டுள்ள படைத்தரப்பு அதியுயர் பாதுகாப்பு வலயமாக அப்பகுதியைப் பிரகடனப் படுத்தி, அங்கிருந்து இடம் பெயர்ந்துள்ள மக்களை மீளக் குடியமர அனுமதி மறுத்து வருகின்றது.

இந்நிலையில் பருத்தித் துறைப் பகுதியில் தனியார் காணிகளில் முகாம் அமைத்துக் குடியேற்றப்பட்டுள்ள குடும் பங்கள் பலவும் அங்கிருந்து வெளியேற வேண்டிய நிலைக்கு உள்ளாகியுள்ளன.

இந்நிலையில் இக்குடும்பங் களை நாகர் கோவிலை அண்டிய கரையோரக் கிராமமான கொட்டோடைப் பகுதியில் குடியமர்த்த யாழ்.அரச அதிபர் மேற் கொண்டிருந்த முயற்சிகள், படைத்தரப்பின் அனுமதியின்மையால் கைவிடப்பட் டிருந்தது.

ஆயினும் தமது தொழில் வாய்ப்பைக் கருதி வேறிடங்களில் தங்களைத் தக்கவைக்க அரச அதிகாரிகள் மேற்கொண்ட முயற்சிக்கு இடம்பெயர்ந்த இம்மக்கள் ஒத்துழைப்பு நல்கவில்லை. இதையடுத்தே விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான "குடாரப்பு" கரையோரக் கிராமத்தில் இவர்களைக் குடியமர்த்தச் சில தொண்டரமைப்புக்களின் உதவியுடன் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. முதல் கட்டமாக ஐம்பது குடும்பங்களை அப்பகுதியில் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரியவருகிறது. (27)

# சந்தேகத்திற்கிடமாக நடமாடிய 4 பேர் சாவகச்சேரியில் கைது

## – தடுத்துவைக்க நீதவான் உத்தரவு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி இந்துக் கல்லூரி முன்பாக நள்ளிரவு வேளையில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடியதாகக் கூறப்படும் நான்கு இளைஞர்கள் பொலிசாரால் பிடிக் கப்பட்டுள்ளனர். இவர்கள் பயணஞ் செய்யப்பயன்படுத்திய தாகத் தெரிவிக்கப்படும் மோட்டார் சைக்கிளொன்றை பொலிசார் பறிமுதல் செய்துள்ளனர்.

இதுபற்றி மேலும் தெரிய வருகையில், யாழ்-கண்டி வீதியூடாக ரோந்து நடவடிக்கையில் ஈடு பட்டிருந்த சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எரிக் ரோஹித தலைமையிலான பொலிஸ அணியினர் சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதியில் சந்தேகத் திற்கிடமான வகையில் நடமாடிய இவர்களை விசாரணைக் குள்ளாக்கியுள்ளனர்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி நுழைவாயில் பகுதியில் நடமாடிய இந் நால்வரும் ஒன்றுக் கொன்று முரணான தகவல்களை தெரிவித்ததையடுத்து அவர்களை கைது செய்த பொலிசார் சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முன் தினம் ஆஜர்படுத்தினர்.

இந் நால்வரையும் எதிர்வரும் 29ஆம் திகதி வரை யாழ். சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைப்பதற்கான உத்தரவை சாவகச்சேரி நீதவான் சுப்பிரமணியம் பொலிசாருக்குப் பிறப்பித்துள்ளார்.

இதேவேளை முல்லைத்தீவு, வறணி மற்றும் மிருசுவில் வடக்கு முகவரிகளைக் கொண்ட ஆள் அடையாள அட்டைகளை இவர்கள் வைத்திருந்ததாகப் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

எனினும் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் ஒருவர் மீது மட்டும் சுடாநாட்டிலுள்ள நீதி மன்றுகளில் 14 வழக்குகள் உள்ளதாகப் பொலிசார் கூறுகின்றனர்.(27)

# செய்தியாளர் எம்மை வெளியேறக் கோரியது மனவருத்தத்தை உண்டுபண்ணியுள்ளது

## – கண்காணிப்புக்குழுவின் யாழ். அதிகாரி தெரிவிக்கிறார்

(யாழ்ப்பாணம்)

செய்தியாளர்கள் தம்மை வெளியேறுமாறு கோரியமை தமக்கு பெரும் மனவருத்தத்தை உண்டு பண்ணியுள்ளதாக இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.அலுவலக அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த 11ஆம் திகதி அரியாலை-மாம்பழம் சந்தியில் இடம்பெற்ற ஒட்டோ மற்றும் இராணுவ வாகன விபத்துத் தொடர்பான செய்தி சேகரிக்கச் சென்ற பத்திரிகையாளர் மீதான படையினரின் தாக்குதல் குறித்து கண்காணிப்புக்குழு நடவடிக்கை எடுக்காது அலட்சியப் போக்கை கடைப்பிடித்தமை கண்டிக்கத்தக்கது எனக்கூறி கடந்த 12ஆம் திகதி யாழ். மாவட்ட ஊடகவியலாளர்கள் கூடி கண்காணிப் புக் குழு அலுவலகம் முன் பாக நடாத்திய போராட்டத்தின் போது படையினரின் அடாவடித்தனங் களையும் பழிதீர்க்கும் நடவடிக் கையையும் கண்காணிப்புக்குழு கண்டும் காணாதது போல் நடந்து கொள்வது கண்டிக்கத்தக்கது எனவும் இதனைத் தீர்க்க முடியாத கண்காணிப்புக்குழு யாழ் மாவட்டத்தில் இருந்து உடனடியாக வெளியேற வேண்டும் எனவும் கூறியமை தமக்கு மன வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவித்த கண்காணிப் புக் குழு அதிகாரிகள், புரிந்துணர்வு உடன்படிக்கையை பாதுகாப்பதே எமது கடமையாக இருந்தாலும் தமக்கு இயன்ற அதிகாரத்துடன் மேற்குறித்த சம்பவத்திற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்துள்ளனர். (33)

திருமலைத்துறைமுகம் புலிகளால் தாக்கப்படும் என்ற

# சனாதிபதியின் கூற்றுக்கள் இந்.வெளி விவ. அமைச்சரால் நிராகரிப்பு

(கொழும்பு)

திருகோணமலை துறைமுகத் திற்கு விடுதலைப்புலிகளால் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்ற குற்றச்சாட்டுக்களை இந்தியா ஏற்க வில்லை என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ் வந்சிங்கா தெரிவித்துள்ளார்.

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு சிறிலங்கா வந்துள்ள ஜஸ்வந் சிங்கா நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் உரையாற் றும்போதே, அவர் அதனைத் தெரிவித்தார்.

இந்தியா குத்தகைக்கு எடுத்துள்ள திருகோணமலை எண்ணெய்க் குதங்களுக்கு அச்சுறுத்தல் உருவாகி இருப்பதாக தெரிவிக்கப்பட்ட கருத்துக் களையும் அவர் நிராகரித்துள்ளார்.

சனாதிபதியும், பொ.ஐ.முன்னணியும் இவ்வாறான கருத்துக்களைக் கூறிவந்தாலும் எதிர்காலத்திலும் கூட அவை தாக்கப்படமாட்டாது என்ற நம்பிக்கை தமக்கு இருப்பதாகவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# உ.பா.வலயத்தில் மக்கள் குடியேறும் சாத்தியம் குறைவாகவே உள்ளது

## யாழ். இல் கனேடிய வெளிவிவகார அமைச்சர்

(வடமராட்சி)

அதியுயர் பாதுகாப்பு வலயங்களில் மக்கள் மீள்குடியேற்றம் படைச் சமநிலையுடன் தொடர்புபட்டுள்ளமையால் அப்பகுதிகளில் மக்கள் குடியமர்வதற்கான சாத்தியங்கள் குறைவாக இருக்கிறன என-கனேடிய வெளிவிவகார அமைச்சர் பில் கிரஹம் நேற்று யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர் சந்திப்பில் குறிப்பிட்டுள்ளார்.

யாழ். விஜயத்தை நேற்று மேற்கொண்டிருந்த கனேடிய வெளிவிவகார அமைச்சர் பலாலியில் சிறிலங்காப் படை அதிகாரிகளுடனான சந்திப்பொன்றை மேற்கொண்டிருந்தார். அத்துடன் மாலை யாழ். நகரப் பகுதிக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். மேலும் உள்ளூர் ஊடகவியலாளர்களையும் சந்தித்தார்.

நேற்று மாலை 3.45 மணியளவில் நல்லூர் கோயில் வீதியிலுள்ள அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் நிதியத்தின் விருந்தினர் விடுதியில் உள்ளூர் ஊடகவியலாளர்களை அவர் சந்தித்து உரையாடினார்.

புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தை மேசைக்கு வந்துள்ள நிலையில் கனேடிய அரசு புலிகள் மீதான தடையை நீடிப்பது தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போது,

புலிகள் மீதான தடை ஐ.நாடுகள் ஸ்தாபனத்தின் சட்ட வரைவுகளுக்கு உட்பட்டே தடை செய்யப்பட்டுள்ளதாகவும், பயங்கரவாதம் தொடர்பாக ஐ.நாடுகள் ஸ்தாபனம் வரையறுத்துள்ள நிலைகளுக்குள் புலிகள் அமைப்பும் உள்ளடங்கியுள்ளதாலேயே அவர்களைத் தடை செய்ய வேண்டி வந்ததாகவும், இது கனேடிய அரசின் தனிப்பட்ட நடவடிக்கையாக அமையவில்லையென அவர் மேலும் கூறியுள்ளார்.



இதேவேளை தற்போதைய சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக அவர் கூறுகையில்: புலிகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் இடைக்கால நிர்வாக வரைவினை இம்மாத இறுதியினுள் அரசிடம் அவர்கள் கையளிப்பார்களெனத் தாம் எதிர்பார்ப்பதாகவும், அவ்வாறு கையளிக்க வேண்டுமென தாங்கள் வலியுறுத்தி வருவதாகக் கூறியுள்ளார். அத்துடன் இவ் இடைக்கால நிர்வாக வரைவினை அரசு ஏற்று புதிய முறையில் பரிசீலித்து சமாதான நடவடிக்கைகள் வலுப்பெறுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமென தான் நம்புவதாகக் கூறியுள்ளார்.

இதேவேளை 'அதியுயர் பாதுகாப்பு வலயம் என கூறி குடாநாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படாதமை தொடர்பாக எழுப்பிய கேள்விக்கு கருத்து தெரிவிக்கையில் படைத் தலைமையின் சமநிலையுடன் இவ் விடயம் தொடர்புபட்டிருப்பதனால் அவை அதியுயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளில் மக்கள் குடியமர்வதற்கான சாத்தியங்கள் குறைவாக இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தினதும் தமிழீழ விடுதலைப் புலிகளினதும் உடன்படிக்கையின் முக்கியத்துவம் சமஷ்டி அமைப்பை அடிப்படையாகக் கொண்டு தீர்வு காண்பதே. இலங்கை இனப் பிரச்சினையில் சமாதானத் தீர்வு காண்பதில் கனடா நேரடியான ஆர்வத்தைக் கொண்டுள்ளது. 20 மாதங்களாக யுத்தநிறுத்தம் கடைப்பிடிக்கப்பட்டும் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான நல்ல விடயங்கள் தென்படவில்லை. இனப்பிரச்சின்னயையும் யுத்தத்தையும் முடிவுக்கு கொண்டுவரும் முயற்சியில் கனடா தனது ஆதரவை வழங்கும். இலங்கை மக்களின் சமாதானத்திலும் சக வாழ்விலும் நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம். கனடா அரசாங்கம் நீண்ட அனுபவத்தைக் கொண்டுள்ளது. பல இன, மொழி, சமயத்தை உடைய மக்கள் எவ்வாறு வாழமுடியும் என்பதை நாம் கற்றுள்ளோம். கடந்த வருடங்களில் சமாதானத் திட்டம் பற்றி பெரும் அனுபவங்களையும் அறிவுகளையும் பல கட்சிகளுடன் பகிர்ந்துள்ளது. இப்படிப்பட்ட வேலைத் திட்டங்களுக்கு கனடா நிதியுதவி வழங்கியுள்ளது என்றார். (27)

# யாழ். இல் கனேடிய அமைச்சரின் சந்திப்புக்கள் பல ரத்து!

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிற்கு விஜயத்தை மேற்கொண்டிருந்த கனேடிய' வெளிவிவகார அமைச்சர் நேற்று யாழ். அரச அதிபர் மற்றும் யாழ். ஆயர் உள்ளிட்ட பலருடனான சந்திப்புக்களை மேற்கொள்ளவில்லை எனத் தெரிய வருகின்றது.

அரச அதிபர், யாழ். ஆயர், அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் சந்திப்புக்கள் இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தும் அவர்களுக்கு உரிய முறையிலான அழைப்புக்கள் விடுக்கப்படாமையால் அவர்களுடனான சந்திப்பு கைகூடவில்லை.

இதேவேளை, கனேடிய வெளிவிவகார அமைச்சரின் யாழ். விஜயம் எதிர்பார்த்த இலக்கை எட்டவில்லை என்றும் கூறப்படுகின்றது. (27)

## அரசு சமர்ப்பிக்காது

தமிழீழ விடுதலைப்புலிகள் வடக்கு-கிழக்கு இடைக்கால நிர்வாக பரிந்துரையை சமர்ப்பித்த பின்னர் அரசாங்கம் அதற்கு பதில் யோசனையை சமர்ப்பிக்காது என அமைச்சரவைப் பேச்சாளர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் மாநாடு இன்று நடைபெற்றது. இதில் தகவல் அளித்த அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தமிழீழ விடுதலைப் புலிகளின் யோசனை கிடைத்த பின்னர் உடனடியான பேச்சுவார்த்தை ஒன்றுக்குசெல்வது குறித்து அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகக் கூறினார். (32)

## பொலிஸ்மா...

அத்துடன் பதில் பொலிஸ்மா அதிபரை சனாதிபதி தனக்குள்ள நிறைவேற்று அதிகாரத்தின் அடிப்படையில் நியமித்துள்ளதாக வும் கூறியுள்ளது. இதற்கான அதிகாரம் யாப்பின் 41பி இரண்டாம் பிரிவின் கீழ்சனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் அரசியல் அமைப்பு மன்றம் பொலிஸ்மா அதிபரை நியமிப்பதில்எடுக்கும் காலதாமதம் காரணமாக சனாதிபதி இம் முடிவை எடுத்துள்ளதாகவும் சனாதிபதி செயலகம் மேலும் கூறியுள்ளது.

இதேவேளை, புதிய பொலிஸ்மா அதிபர் ஒருவரை சனாதிபதி நியமிக்கும் வரையில் தற்போது சிரேஷ்ட தரத்தில் இருக்கும் நான்கு பிரதிப் பொலிஸ்மா அதிபர்களையும் பொலிஸ்மா அதிபரின் பணிகளை இணைந்து மேற்கொள்ளுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

உள்துறை அமைச்சின் செயலாளர் ஜுனைட்டிடம் பொலிஸ்மா பொறுப்புக்களை ஒப்படைப்பதாகவும், நான்கு பிரதிப் பொலிஸ்மா அதிபர்களையும் இவரின் கீழ் இணைந்து பணியாற்றுமாறு பிரதமர் உத்தரவிட்டுள்ளார்.(32)

## போலியோ...

அனைத்து சிறார்களுக்கும் தவறாது இந்த சொட்டு மருந்தினை பெற்றுக் கொள்ளுமாறு பெற்றோர் ,பாதுகாவலர் அனைவரையும் மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி கேட்டுக் கொண்டுள்ளார். (24)

## சர்ச்சை..

சபையை பொறுப்பேற்ற பின்னர் சனாதிபதியினால் வர்த்தமானி அறிவித்தல் வெளியிட முடியாமல் போனமை மற்றும் அரசியல் பழிவாங்கல்கள் குறித்த விடயங்கள் கலந்துரையாடப்பட்டு இணக்கங்களுடன் வழியேற படுத்தப்பட்டன. லஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் மறுசீரமைப்புத் தொடர்பில் சனாதிபதியின் இணக்கமின்மையே நேற்றைய சந்திப்பிற்கு வழிவகுத்தன.(32)

## புலிகளின்...

சாதாரண மரணச் சடங்கில் செய்யப்படும் செயற்பாடுகளைக் கூடச் செய்ய அனுமதிக்க முடியாது என்று படையினர் உத்தரவு போட அதனைத் தாங்களும் எம்மீது திணிப்பதற்கு முற்படுகின்றீர்கள். சாதாரணமாக இலங்கைச் சட்டப்படி சாவடைந்தவரது சாவுச் செய்தியை வெளியில் அறிவிப்பதற்கு ஒலி பெருக்கி அறிவித்தல் செய்வதற்கு அனுமதி உண்டு. அதே போல அவரது உடலை மக்கள் கூடி ஊர்வலமாக எடுத்துச் சென்று இறுதிக் கடமைகளை உரிய இடங்களில் செய்வதற்கான அனுமதியும் உண்டு. மேலும் சாவடைந்தவரை மக்கள் நேசிக்கும் தன்மைக்கேற்ப அவரது நினைவை மீட்டுக்கொள்ளும் அஞ்சலி நிகழ்விற்கும் அனுமதி உண்டு. இவையெல்லாம் சட்ட ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட போதும் படையினர் பெற்றோரிடம் இவ் வித்துடலைக் கொடுப்பதானால், இவை எல்லாவற்றையும் செய்ய முடியாது என்று புதுச் சட்டம் போடுகின்றார்கள். இதனை அமுல்படுத்தத் தாங்களும் வீரச்சாவு நிகழ்வு முடியும்வரை கண்காணிப்பில் ஈடுபட்டீர்கள். சிவில் நடைமுறைக்குட்பட்ட இவ்விடயங்களில் படையினர் தலையிடுவது எமது அரசியல் செயற்பாடுகளுக்கான தடையாகவே நாம் கருதுகின்றோம். அத்துடன் நாங்கள் தங்களுக்குத் தெரியப்படுத்தியது போல் மேற்படி நிகழ்வில் செயற்பட்டோம். இம்மாவீரனின் நினைவு அஞ்சலிக் கூட்டம் சம்பந்தமாக மக்கள் தீர்மானித்துத் தங்களிடம் தெரிவித்திருந்தார்கள். இவர் படித்த பாடசாலையான ஈச்சங்குளம் அ.த.க.பாடசாலையில் ஓர் அஞ்சலி நிகழ்வு நடாத்தப்போவதாக, அதன்படி பிற்பகல் 5.30 மணிக்கு இப்பாடசாலை மண்டபத்தில் அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது. அப்போதுகூடப் படையினராலும் தங்களாலும் இதனை இடைநிறுத்தப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

பொதுமக்கள் செய்யும் நிகழ்வுகளுக்குப் படையினரும் தாங்களும் தடை போடுவதன் நோக்கம் என்ன? படையினர் போடும் புதிய புதிய சட்டங்களை அப்படியே நடைமுறைப்படுத்தத் தாங்கள் விழைவது எமக்கு விசனத்தை ஏற்படுத்துவதுடன் எமது அரசியல் கடமைகளைச் செய்வதற்கான தடையாக உள்ளது என்பதனையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். இதேபோன்ற செயற்பாடுகளை எதிர்காலங்களில் தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள் கின்றோம். (21)

## இடைக்கால...

விவாதத்திற்கு சரியான திகதியை பெறுவதற்கு நோர்வே வெளிநாட்டமைச்சு இக்கூட்டத்தை நடத்தியது. இடைக்கால நிர்வாகம் பற்றி அரசியல்துறைப் பொறுப்பாளர் சுருக்கமாக எடுத்துக் கூறினார்.

இச்சந்திப்பில் அரசியல்துறைப் பொறுப்பாளருடன் மூத்த தளபதி கேணல கருணா, சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் பிரதி அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழ்விழி பிரதி சமாதான செயலகப் பணிப்பாளர் செல்வி ஆகியோர் கலந்து கொண்டனர்.

நோர்வே தரப்பில் விசேட தூதுவர் எரிக்சூல்ஹெய்ம், முன்னாள் சிறிலங்காவுக்கான நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்பேர்க், சிறிலங்கா விவகாரங்களுக்கான அமைச்சு ஆலோசகர் லிசாகேஸ்டன் ஆகியோர் பங்கேற்றனர்.

## நோர்வே...

வடக்குக்கிழக்கிற்கான இடைக்கால நிர்வாக அமைப்பு தொடர்பானவரைவு அதை நோர்வேத் தரப்பினரிடம் கையளிக்க இருக்கும் காலம் மற்றும் தற்போதைய அரசியல் நிலைபற்றி தாம் அறிந்து கொள்ள ஆவலாக இருப்பதாகவும் தமிழ்ச்செல்வன் அவர்களிடமிருந்து களநிலைபற்றியும் சமாதானத்தின் பெறுபேறுகள் பற்றியும் விரிவாக அறிந்து கொள்ள இந்த வாய்ப்பைப் பயன்படுத்தவுள்ளதாகவும் பீற்றர்சன் அவர்கள் தெரிவித்தார்.

தமிழ்மக்களின் பிரதிநிதிகளை நோர்வே நாட்டிற்கு அழைத்து வெளியுறவு அமைச்சரைச் சந்திக்க ஒழுங்குசெய்த நோர்வே அரசுக்கும் மக்களுக்கும் தமிழ் மக்கள் சார்பிலும் தமிழீழ தேசிய யத் தலைவர் திரு.வே. பிரபாகரன் அவர்கள் சார்பிலும் நன்றி தெரிவித்த தமிழ்ச்செல்வன் இடைக்கால நிர்வாக வரைவு சமர்ப்பிக்கட்ட இருக்கும் பின்னணியில் இன்றைய அரசியற் சூழலை பின்வருமாறு விளக்கினார்:

பாரிஸ் நகரில் வரைவு செய்திருந்த இடைக்கால நிர்வாகம் தொடர்பான கருத்துக்கள் தேசியத் தலைவரிடம் எடுத்துச்செல்லப்பட்டு அவரது பரிசீலனையின் பின் மேலும் திருத்தங்கள் செய்யும் தேவை இருந்ததால் இம்மாதத் தொடக்கத்தில் அயர்லாந்திற்குப் பயணஞ் செய்து அங்கு வெளிநாடுகளிலிருந்து வந்த தமிழ் சட்ட வல்லுநர்கள், அரசியல் அமைப்பு வரைவு சார்ந்த நிபுணர்கள் கூடி ஓர் இறுதி வடிவம் கொடுக்க முடிந்துள்ளது. இதனைத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களிடம் சமர்ப்பித்து அவரது பரிசீலனையின் பின் நோர்வே அனுசரணையாளர்களூடாக இலங்கை அரசுக்கு சமர்ப்பிக்கவுள்ளோம்.

இடைக்கால நிர்வாக அமைப்பு ஒன்றின் மூலமே யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் உறுதி செய்யப்பட்ட சமாதானத்தின் பெறுபேறுகளான இயல்புநிலை அமைதி மீளக்குடியேற்றம் புனர்வாழ்வு என்பவற்றை மக்களுக்கு விரைவாக வழங்க முடியும். இதை மனதில் கொண்டே சமாதானப் பேச்சுவார்த்தைகளின் இரண்டாம் கட்டத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் உடனடி மனிதாபிமான தேவைகளை கவனிக்க சிரான் என்ற உப குழுவை இருதரப்பும் இணங்கி நிறுவினோம். துரதிர்ஷ்ட வசமாக அந்த உபகுழு அரசின் அசமந்தப்போக்கால் செய லிழந்து போய்விட்டது. இதன் விளைவாகவே ஒரு செயற்திறன்மிக்க அமைப்பின் அவசியம் எழுந்தது. இந்த வரைவை உருவாக்குவதில் எங்கள் தமிழ்சமூகத்தைச் சேர்ந்த வெளிநாடுகளில் வாழும் சட்ட வல்லுநர்களும் அரசியலமைப்பு விவகாரத்தில் அனுபவம் மிக்கவர்களும் பங்கெடுத்ததுடன் அயர்லாந்து நகரில் வரைவை மீளாய்வு செய்த பொழுதுவட அயர்லாந்துப் பல்கலைக்கழக அரசியலமைப்பு விவகாரப் பேராசிரியர் பாராளுமன்றப் பிரதிநிதிகள் மற்றும் போகனவில் சமாதானத் தீர்வில் பங்கு கொண்ட பேராசிரியர்கள் போன்ற பலர் தமது அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டனர். இதையும் விட உலகின் பல பகுதிகளிலும் இனப்பிரச்சினைத்தீர்வுகள் இறுதிசெய்யப்பட முன்பாக ஏற்படுத்தப்பட்ட இடைக்கால ஒழுங்குகள் பற்றியும் இலங்கையில் ஐம்பதுகள் தொடக்கம் தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைத் தீர்வு தொடர்பாக எய்தப்பட்ட ஒபந்தங்கள் சகலதுமே பலனளிக்காது போனதன் காரணங்களையும் கருத்திற்கொண்டே இந்தவரைவிற்கு இறுதி வடிவம் கொடுத்துள்ளோம். வடக்குக் கிழக்கில் வாழும் எல்லா மக்களுக்கும் சம உரிமையும் கௌரவத்துடனான சமாதானமும் கிட்டுவதற்கான இறுதித்தீர்வை நோக்கிய எங்கள் முயற்சியில் இடைக்கால நிர்வாக அமைப்பு ஓர் முக்கியமான அம்சமாகும்.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் இருதரப்பாலும் இணக்கம் காணப்பட்ட இயல்புநிலை தோற்றுவித்தல், மீள்குடியேற்றம் மற்றும் இராணுவ நெருக்குவாரமற்ற அமைதியான வாழ்வு என்பவை மூலமே மக்களுக்கு சமாதான நடவடிக்கைகளில் நம்பிக்கையை ஊட்ட முடியும். இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக இராணுவ நடவடிக்கைகளால் தமது வீடுவாசல்களைவிட்டு விரட்டப்பட்ட மக்கள் யுத்தநிறுத்த ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டு ஒன்றரை வருடம் கடந்த நிலையிலும் அகதிமுகாம்களில் அல்லறபடுகின்றனர். மக்கள் அடர்த்தியாக வாழும் இடங்களிலும் இராணுவம் தனது ஆயுதப் பிரசன்னத்துடன் மக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்திக்கொண்டு ஆக்கிரமித்து நிற்கிறது. விவசாயிகள் தமது சொந்த இடங்களில் குடியேறி விவசாயம் செய்ய முடியாத விதத்தில் இராணுவத்தின் உயர் பாதுகாப்பு வலயம் பெரும் தடையாக உள்ளது. மீன்பிடிப்போர் கடலுக்குச் செல்ல கடற்படை பலவிதமான கட்டுப்பாடுகளை விதிக்கிறது.

இந்தச் சூழ்நிலையில் மக்களுக்கு இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்த முடியாத அரசியல் பேசுவார்த்தையிலும் சமாதான முயற்சிகளிலும் மக்கள் நம்பிக்கை இழந்து நிற்கிறார்கள். இதைச் சர்வதேச சமூகம் கருத்தில் எடுத்து அண்மைக்காலமாக வடக்குக்கிழக்கில் அதிகரித்துவரும் இராணுவ நெருக்குவாரங்களையும் முறுகல் போக்கையும் தவிர்த்து ஓர் இயல்புநிலையை உருவாக்கி இடைக்கால நிர்வாக அமைப்புக்கு விரைவில் செயலுருவங் கொடுக்க இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுப்பது அவசிய மாகிறது. இது மேலும் தாமதமாகுமானால் சமாதான முயற்சிகளில் பெரும் பின்னடைவுகள் ஏற்படலாம். இலங்கைத்தீவில் எல்லோருக்கும் அமைதி ஏற்பட வேண்டும் என்ற சர்வதேச சமூகத்தின் விருப்பை நிறைவேற்ற இது ஒன்றே வழி சமைக்கும்.'

தமிழ்ச்செல்வன் அவர்களின் கருத்துக்களைக் கரிசனையுடன் கேட்ட வெளியுறவு அமைச்சர் நிலைமையைத்தெளிவாகவிளங்கிக்கொண்டதாகவும் ஏற்பாட்டாளர்கள் என்ற வகையில் தங்களாலான சகல முயற்சிகளையும் மேற்கொண்டு தமிழ்மக்களின் பிரச்சினைத்தீர்வுக்கும் நிரந்தர அமைதி கிட்டுவதற்கும் சர்வதேச அபிப்பிராயத்தை வலுவுள்ளதாக்கி இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க ஆவன செய்வதாக வாக்குறுதியளித்தார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 17ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.